மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ம் நாள் திங்கட் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 426/2018 வா.சா. 3 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. கோவிந்தசாமி | வயது | .. 71 |
| த/பெ. | .. நடேச கவுண்டர் | சாதி | .. |

13.09.2021 - வா.சா.3 குறுக்கு விசாரணை.

சகாதேவன் எங்கிருந்தார் என்றால் முதலில் பெரியகரத்தில் இருந்தார். பிறகு 1963ல் வாக்கில் சென்னை சென்றார். அதன் பிறகு ஆந்திராவில் உள்ள அரசு கல்லூரியில் பணியாற்றினார். ஆந்திராவிற்கு எப்போது சென்றார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஆந்திரா சென்ற பிறகு தனது அக்கா மகள் நீலாவதி என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஆந்திராவில் இருந்து பெரியகரம் கிராமத்திற்கு வந்து நீலாவதி என்பவரை திருமணம் செய்து கொண்டு ஒருமாதம் கழித்து நீலாவதியை இங்கேயே விட்டு விட்டு அவர் மீண்டும் ஆந்திரா சென்று விட்டார். நீலாவதியை அவருடன் அழைத்துச்செல்லும்படி யாரும் கூறவில்லையா என்றால் அவரது நிலம் இங்கிருந்ததால் நிலத்தை பார்த்துக்கொள்ளும் பொருட்டு அவரை இங்கேயே விட்டு விட்டு சகாதேவன் மட்டும் அடிக்கடி வந்து செல்வார். சகாதேவன் எந்த ஆண்டு வரை ஆந்திராவில் தனியாக இருந்தார் என்றால் அவர் ஓய்வு பெற்ற 2004ம் ஆண்டு வரை அங்கிருந்தார். அதன் பிறகு 2004 முதல் 2008 வரையில் ஆந்திராவில் இருந்து உடல் நிலை சரியில்லாமல் அங்கேயே இறந்துபோனார். பணி ஓய்வு பெற்ற பிறகும் நிலத்தை பார்த்துக்கொண்டு சொந்த ஊரில் இல்லாமல் ஏன் 2008 வரை ஆந்திராவில் இருந்தார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. அவரது சாவிற்கு நான் செல்லவில்லை. சகாதேவன் உடலை எங்கு அடக்கம்

செய்தார்கள் என்றால் ஆந்திராவில் அடக்கம் செய்தார்கள். ஏன் சொந்த ஊருக்கு கொண்டு வரவில்லை என்றால் சகாதேவன் உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லாததால் நீலாவதி ஆந்திராவிற்கு சென்று அங்கேயே அடக்கம் செய்து விட்டார். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் இறந்து போன சகாதேவன் என்பவருக்கு 1ம் பிரதிவாதி தான் சட்டப்படியான மனைவி என்றாலும் 2 முதல் 4 பிரதிவாதிகள் அவருக்கு பிறந்த வாரிசுகள் என்றாலும் சரியல்ல. அதனால்தான் சகாதேவனின் உடலை அங்கேயே அவர்கள் அடக்கம் செய்தார்கள் என்றால் அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவரது மனைவி யார் என்றும் எனக்குத் தெரியாது. நீலாவதி அம்மாள் கைகுழந்தையுடன் இருந்ததாலும், சகாதேவனின் அக்கா மகள் என்பதாலும் அவரது நிலத்தை பார்த்துக்கொள்ள அவர் அனுமதித்ததாரே தவிர உண்மையில் நீலாவதி அவரது மனைவி அல்ல என்றாலும் தேன் மொழி அவரது வாரிசு அல்ல என்றாலும் சரியல்ல. நீலாவதி தான் சகாதேவனின் உண்மையான மனைவி. நான் பொய் சாட்சியம் சொல்வதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.